## குரல்

----------------------------

யார் காதிலும் விழாமல் ரகசியமாய்
எனக்கு மட்டுமே கேட்கிறது
எனக்குள் ஒரு குரல்.
என் குழந்தைக்குப் பெயர் வைப்பதுபோல
இனிமையான ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து
அதற்குச் சூட்டி உரையாடத் தொடங்குகிறேன்.
காலியான ஒரு பிரம்மாண்ட மாளிகைபோல்
துடிக்கும் என் இதயத்தின் நான்கு உள்ளறைகளிலும்
குரல் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.
நாற்சந்தியின் சிக்னல் விளக்குகள் பேசுவதுபோல
போ அல்லது போகாதே என்று எனக்குத்
தொடர்ந்து கட்டளை இடுகிறது.
தூங்கிவிட்டால் எனது கனவுகளின் கடைகோடி
தெருவுக்கும்
என்னைத் தேடி வந்து பேசுகிறது.
எனது எல்லா ரகசியங்களையும் அறிந்த அதன்
தொல்லை தாங்க முடியாமல் அதனை உயிரோடு
புதைக்கிறேன்.
மறுநாளே சிரித்துக் கொண்டு எழுந்து வருகிறது
இன்னும் கவர்ச்சியான புதிய குரலோடு.
நீரில் மூழ்கிய பனிக்கட்டியைப் போல்
உடல் மறைத்துத் தலையை மட்டும் வெளியே காட்டி
மனக் கடலில்.மெல்ல நகர்ந்து
எனக்கான எல்ல திட்டங்களையும் வகுத்துக் கொடுக்கிறது.
உடனே போய்ச் செயல்படுத்து என்று
என் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறது.

உள்ளே இருக்கும் குரலை
வெளியே இருப்பவர்களோடு சேர்ந்து கொண்டு
நான் பயங்கரமாகத் தோற்கடிக்கிறேன்.
என் சொந்த வீட்டின் நிஜமான எஜமானன் யார்?
நானா? எனக்குள் கேட்கும் குரலா?
நான் கோபப்பட்டாலும்
குரல் என்னிடம் கோபித்துக் கொண்டதேயில்லை.
எப்போதும் என்னை மன்னிக்கத் தயாராயிருக்கும்
அம்மாவைப் போல் நடந்து கொள்கிறது.
நான் எனது உள்குரலைக் கட்டி அணைக்கிறேன்.
அதன் நிழலும்கூட எனது உயிர் நண்பனாகிறது.
எனக்குள் ஒரு தீபம் ஏற்றி வைக்கப்படுகிறது.
மன சமாதானத்தின் தீபச்சுடர்
காற்றில் நடுங்காமல் நின்று எரிகிறது
--18 ஆகஸ்ட்டு 2020

